DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.72/2024

PW - 4

| | | |
|---|---|---|
| Name | : | விஜயா (Lw - 4) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(1, 2, 4** மற்றும் **5** எதிரிகள் ஆஜர் **3**ம் எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச.பிரிவு **317-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**)**

முதல் விசாரணை **Date : 12.08.2025**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சிங்கலாந்தபுரத்தில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். (சாட்சி எதிரிகளை அடையாளம் காண்பித்தார்.) சாட்சி 5 செல்வராஜ் எனது கணவர் நான் அவரின் முதல் மனைவி. அ.சா.1 லட்சுமி எனது தங்கை எனது கணவரின் இரண்டாவது மனைவி ஆவார். ஆஜர் எதிரிகள் அனைவரும் எனது உறவினர்கள்.

எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே நிலம் தொடர்பான பத்திரம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. தேதி நினைவில் இல்லை 2021ம் வருடம் கொரோனா சமயம் மதியம் 12 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். எனது வீட்டிற்கு அருகே இருக்கும் அ.சா.1 லட்சுமியின் வீட்டில் இருந்து சத்தம் கேட்டது. என்னவென்று போய் பார்த்தபோது ஆஜர் எதிரிகள் அனைவரும் சேர்ந்து அ.சா.1 லட்சுமியை அடித்து கொண்டிருந்தார்கள். நான் அவர்களை விலக்கிவிட்டேன். லட்சுமிக்கு முகத்தில் காயம் ஏற்பட்டிருந்தது.

லட்சுமியை நான் இராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சுமார் ஒரு வாரம் லட்சுமி அங்கு சிகிச்சை பெற்றார். போலீசார் மருத்துவமனையில் வந்து விசாரித்து லட்சுமியிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஆஜர் எதிகளுக்கும் எங்களுக்கும் வீட்டு நில பத்திரம் சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். என்னிடம் தனியாக போலிசார் விசாரித்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் அ.சா.1ஐ விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் போலிசார் தனிப்பட்ட முறையில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல மருத்துவமனையில் விசாரித்தார்கள் அதன் பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை. நானும் எனது தங்கை லட்சுமியும் எதிரி 1 பெருமாயி என்மீதும் எனது தங்கை அ.சா.1ன் மீதும் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எனது தங்கையை எதிரிகள் அடிக்கவில்லை என்றாலும் எதிரிகள் எங்கள் மீது கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக வேண்டி எதிரிகள் மீது இந்த புகாரினை பொய்யாக கொடுத்துவிட்டு அதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowlweldge by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**